கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், 22, ராஜா முத்தையா சாலை, சென்னை–03 அவர்களின் செயல்முறை ஆணைகள்.

******

முன்னிலை: மேஜர் வி.எஸ்.ஜெயக்குமார்,(ஓய்வு).,
கூடுதல் இயக்குநர் .

இருப்பிடம்: சென்னை – 600 003

***

செயல்முறை ஆணை எண். 5103 /2021/நிர்1 நாள். 24.03.2021.

பொருள்: பணியமைப்பு – முன்னாள் படைவீரர் நலத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணி மாறுதல் மூலம் பதவி உயர்வில் தற்காலிக இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டது – திருமதி. மு. கௌரி, இளநிலை உதவியாளர், முன்னாள் படைவீரர் நல அலுவலகம், மதுரை – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்தல் – தொடர்பாக.

சுட்டு :

1. அரசாணை எண்.43, பணியாளர் (மற்றும்) நிர்வாகச் சீர்திருத்த (பணியாளர்–பி)த் துறை, நாள். 15.02.1994.
2. அரசாணை எண்.15, பணியாளர் (மற்றும்) நிர்வாகச் சீர்திருத்த (பணியாளர்–பி)த் துறை, நாள். 21.02.2002.
3. அரசாணை எண்.39, பணியாளர் (மற்றும்) நிர்வாகச் சீர்திருத்த (பணியாளர்–பி)த் துறை, நாள். 01.03.2004.
4. அரசு கடித எண்:27385/2007–2,பொது(முன்னாள் படைவீரர்)த் துறை, நாள்.27.06.2007.
5. அரசு கடித எண்:27385/2007–4,பொது(முன்னாள் படைவீரர்)த் துறை, நாள்.10.08.2007.
6. கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை–3 அவர்களின் செயல்முறை ஆணை எண்.5103/2020/நிர்1, நாள். 03.09.2020.

****

**ஆணை:**

சுட்டு (1) முதல் (3)–ல் வரை காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ள விதிமுறைகளின்படி, பணி மாறுதல் மூலம் (Recruitment by transfer) பதவி உயர்வு வழங்கி, சுட்டு (6)–ல் காணும் செயல்முறை ஆணையின்படி திருமதி. மு. கௌரி என்பவரை தற்காலிக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டது. தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்பு செய்த நாள் முதல் கீழ்குறிப்பிட்டவாறு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | இளநிலை உதவியாளரின் பெயர் | பணிபுரியும் அலுவலகம் | பணியேற்பு செய்த நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி. மு. கௌரி | முன்னாள் படைவீரர் நல அலுவலகம், மதுரை. | 23.09.2020 முற்பகல் |

2. மேற்குறிப்பிட்ட தனியரின் பணி, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் அப்பதவியில் பணியேற்பு செய்த நாள் முதல் தொடர்ச்சியான மூன்று ஆண்டு காலத்தில் இரண்டு ஆண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவத்தில் தக்க வைக்கப்படுகிறார்.

தகுதிகாண் பருவ காலத்தில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துறை தேர்வுகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

1. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு
2. பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி

3. பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் மேற்குறிப்பிட்ட பணியாளரின் பணிப்பதிவேடு மற்றும் பணிவரன் முறை செய்திடும் பதிவேட்டிலும், உரிய பதிவுகள் செய்திடுமாறு துணை இயக்குநர், முன்னாள் படைவீரர் நல அலுவலகம், மதுரை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இச்செயல்முறை ஆணையினை பெற்றமைக்கு ஏற்பளிப்பு செய்தல் வேண்டும்.

(ஒம்)/– வி.எஸ்.ஜெயகுமார்.
கூடுதல் இயக்குநர்.

பெறுநர்

திருமதி. மு. கௌரி,
இளநிலை உதவியாளர், – துணை இயக்குநர் மூலமாக.
முன்னாள் படைவீரர் நல அலுவலகம்,
மதுரை

<u>நகல்:</u>

1. துணை இயக்குநர், முன்னாள் படைவீரர் நல அலுவலகம், மதுரை மாவட்டம்.
2. சம்பள கணக்கு அலுவலர், மதுரை மாவட்டம்.
3. நிர்வாகம்–3 பிரிவு.
4. முதன்மை ஆணைத் தொகுப்பு.
5. இருப்பு கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

24/3/2021

இயக்குநரின் நேர்முக உதவியாளர் (ந.பொ)

24/3/2021